# வரலாறு
## கொள்குறிவகை வினாவிடைகள்

1. வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது
A) எழுத்து ஆதாரங்கள் கிடைத்துள்ள காலம்
B) எழுத்து ஆதாரங்கள் கிடைக்காத காலம்
C) காலம், இடம், நிகழ்ச்சி ஆகிய மூன்று ஆதாரங்களும் கிடைத்துள்ள காலம்
D) இவைகளில் எதுவுமில்லை

2. ஆதிமனிதன் முதன்முதலில் பழக்கிய விலங்கு
A) மாடு B) குதிரை
C) நாய் D) ஆடு

3. பழைய கற்கால மக்கள்
A) பருத்தி ஆடை அணிந்தனர்
B) கம்பளி ஆடை அணிந்தனர்
C) ஆடையின்றி திரிந்தனர்
D) இலை, மரப்பட்டை, விலங்குகளின் தோல் ஆகியவற்றை ஆடையாக அணிந்தனர்

4. ஆதிச்ச நல்லூர் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் உள்ளது?
A) திருநெல்வேலி B) நீலகிரி
C) கன்னியாகுமரி D) திருவள்ளூர்

5. புதிய கற்காலம் எனப்படுவது
A) கி.மு.1500-கி.மு.600 B) கி.மு.3000-கி.மு.1500
C) கி.மு.10,000 - கி.மு. 4000 D) கி.மு.4000 - கி.மு. 3000

6. முதன்முதலாக மனிதன் பயன்படுத்திய உலோகம்
A) இரும்பு B) செம்பு
C) வெண்கலம் D) தகரம்

7. வேதகால நாகரிகம் எந்த காலத்தைச் சார்ந்தது?
A) புதிய கற்காலம் B) செம்பு கற்காலம்
C) இரும்பு கற்காலம் D) பழைய கற்காலம்

8. ஹரப்பா நாகரிகம் எந்த காலத்தைச் சார்ந்தது?
A) செம்பு கற்காலம் B) புதிய கற்காலம்
C) இரும்பு காலம் D) பழைய கற்காலம்

9. மனிதனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு
A) நெருப்பை உருவாக்குதல் B) சக்கரம் கண்டுபிடித்தல்
C) மண்பாண்டம் செய்தல் D) பயிரிடுதல்

10. மனிதன் சக்கரத்தை எப்போது கண்டு பிடித்தான்?
A) பழைய கற்காலம் B) புதிய கற்காலம்
C) செம்பு கற்காலம் D) இரும்பு காலம்

11. சிந்துவெளி நாகரிகம் பற்றி அறிய உதவுவது
A) கல்வெட்டுகள் B) செப்புப் பட்டயங்கள்
C) நூல்கள் D) அகழ்வாராய்ச்சி சான்றுகள்

12. மொகஞ்சதாரோ என்பதன் பொருள்
A) பூங்கா நகரம் B) துறைமுக நகரம்
C) பழங்கால நகரம் D) இடுகாட்டுமேடு

13. லோத்தல் என்னும் துறைமுகம் காணப்படும் இடம்
A) குஜராத் B) மகாராஷ்டிரம்
C) தமிழ்நாடு D) ஆந்திரா

14. ஹரப்பா நாகரிகம் எவ்வகையான நாகரிகம்?
A) கிராம நாகரிகம் B) நகர நாகரிகம்
C) மாநகர நாகரிகம் D) பழங்கால நாகரிகம்

15. சிந்துவெளி மக்களுக்கு தெரிந்திராத உலோகம்
A) தங்கம் B) செம்பு
C) இரும்பு D) வெண்கலம்

16. ஹரப்பா என்ற சிந்தி மொழிச் சொல்லின் பொருள்
A) ஆற்றங்கரை நகரம் B) நதிகளுக்கிடைப்பட்ட நகரம்
C) பழங்கால நகரம் D) புதையுண்ட நகரம்

17. சிந்துவெளி மக்களுக்கு தெரியாத விலங்கு
A) குதிரை B) நாய்
C) எருது D) மான்

18. மொகஞ்சதாரோவின் மிகச்சிறந்த அமைப்பாக கருதப்படுவது
A) தானியக் களஞ்சியம் B) பெரியகுளம்
C) நகர அமைப்பு D) வீடுகளின் கட்டமைப்பு

19. மொகஞ்சதாரோவின் மிகப்பெரிய கட்ட அமைப்பு எனக் கருதப்படுவது
A) தானியக் களஞ்சியம் B) பெரியகுளம்
C) அரண்மனை D) வீடுகளின் கட்டமைப்பு

20. சிந்து எழுத்துமுறை இதனைக் கொண்டிருந்தது
A) எழுத்துக்கள் B) சித்திரங்கள்
C) கரோஷ்தி வடிவம் D) இவைகளில் எதுவுமில்லை

21. சிந்துவெளி நாகரிக காலத்தில் விளையாட்டு பொம்மைகள் எதனால் செய்யப்பட்டது?
A) செம்பினால் B) இரும்பால்
C) தோல்பொருட்களினால் D) டெரகோட்டாவினால்

22. சிந்துவெளி மக்களின் எழுத்து வடிவம் எந்த மொழியுடன் தொடர்புடையதாக கருதப் படுகிறது
A) ஹந்தி B) சீனம்
C) தமிழ் D) மண்டாரியன்

23. உலகிலேயே மிகத் தொன்மையான தென் வரலாற்றறிஞர் கருதப்படுவது
A) கங்கை சமவெளி
B) விந்திய மலைக்கு தெற்கிலுள்ள பகுதி
C) வடமேற்கு சமவெளி
D) இவைகளில் எதுவுமில்லை

24. மனிதயினம் முதன்முதலாக தோன்றியதாக கருதப்படும் இடம்
A) மத்திய தரைக்கடல் நாடுகள் B) அசிரியா
C) அமெரிக்கா D) லெமூரியா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ......... B | 2 ......... C | 3 ......... D | 4 ......... A | 5 ......... C | 6 ......... B | 7 ......... C | 8 ......... A | 9 ......... A | 10 ......... B |
| 11 ......... D | 12 ......... D | 13 ......... A | 14 ......... B | 15 ......... C | 16 ......... D | 17 ......... A | 18 ......... B | 19 ......... A | 20 ......... B |
| 21 ......... D | 22 ......... C | 23 ......... B | 24 ......... D | | | | | | |

25. திருவள்ளுவர் பிறந்த ஆண்டாகத் தமிழறிஞர்கள் கருதப்படுவது
A) கி.மு.31 B) கி.பி.31
C) கி.மு.13 D) கி.பி.13

26. இடைச்சங்கம் நடைபெற்ற இடம்
A) மதுரை B) தென் மதுரை
C) கபாடபுரம் D) கூடல்நகர்

27. வட வேங்கட மலையென குறிப்பிடப் படுவது
A) விந்தியமலை B) திருப்பதி மலை
C) இமயமலை D) பழனி மலை

28. வரலாற்று காலத்திற்கு முன்னர் பஃறுளியாறு ஓடிய இடம்
A) லெமூரியா கண்டம் B) ஆப்பிரிக்கா கண்டம்
C) இந்திய கண்டம் D) குமரி கண்டம்

29. கூடல்நகர் என்றழைக்கப்படும் நகரம்
A) கூடலூர் B) மதுரை
C) தென்மதுரை D) கபாடபுரம்

30. முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள்
A) சேரர்கள் B) சோழர்கள்
C) பாண்டியர்கள் D) இவர்கள் அனைவரும்

31. சங்ககாலத்தில் தமிழ்புலவர்கள் தமிழகத்தை எத்தனை வகையான நிலங்களாக பிரித்திருந்தனர்
A) 5 B) 3
C) 7 D) 9

32. காவிரியில் கல்லணையை கட்டிய சங்ககால மன்னன்
A) இராஜராஜ சோழன் B) இராஜேந்திர சோழன்
C) கரிகால சோழன் D) எவருமில்லை

33. சங்ககால மக்கள் நடுகல்லை எதற்காக நட்டார்கள்
A) முன்னோர்களது நினைவாக
B) சங்ககால அரசர்கள் நினைவாக
C) மன்னன் தான் பெற்ற வெற்றியின் நினைவாக
D) போரி ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக

34. காடும் காடும் சார்ந்த நிலத்தை சங்ககால புலவர்கள் எவ்வாறு கூறினார்கள்?
A) குறிஞ்சி B) நெய்தல்
C) முல்லை D) மருதம்

35. தமிழ் மொழியை செம்மொழியென எப்போது மத்திய அரசு அறிவித்தது
A) 2005 B) 2004
C) 2010 D) 2008

36. ரிக்வேதகாலம் எனப்படுவது
A) கி.மு.1600-1000 B) கி.மு.1000-600
C) கி.மு1500-600 D) கி.மு.1500-1000

37. ரிக்வேதகாலத்தில் வணிகத்தில் பயன் படுத்தப்பட்ட தங்க நாணய அலகு
A) நிஷ்கா B) சதமணம்
C) கிருஷ்ணலம் D) இவையனைத்தும்

38. பின் வேத காலத்தில் சிறந்து விளங்கிய பெண்மணி
A) கார்கி B) அபலா
C) கோசா D) லோபமுத்ரா

39. சப்தசிந்து எனப்பட்ட பகுதியில் பாயும் நதிகளின் எண்ணிக்கை
A) 5 B) 6
C) 7 D) 12

40. ஆரியர்கள் குடியேறிய பகுதி எவ்வாறு அழைக்கப் பட்டது?
A) சப்த சிந்து B) ஆரிய வர்த்தம்
C) மகதம் D) நாடோடி பகுதி

41. முன் வேத காலத்தைப் பற்றி அறிய உதவுவது
A) இதிகாசங்கள் B) புராணங்கள்
C) ஆரண்யங்கள் D) ரிக்வேதம்

42. விவசாயத்தில் வயலுக்கு உரமிடும் பழக்கம் எப்போது தோன்றியது?
A) சிந்துவெளி காலம் B) முன் வேதகாலம்
C) பின் வேதகாலம் D) எதுவுமில்லை

43. ஆரியர்கள் அறியாத விலங்கு
A) புலி B) குதிரை
C) நாய் D) மாடு

44. ராஜசூயம் என்பது
A) அரசர்களுக்கு உயர்ந்த நிலையினை அளித்தது
B) அரசனின் குதிரை எதிர்ப்பின்றி சென்ற நாடுகளை தன் கட்டுப்பாட்டிற்குரியது என உரிமை கொண்டாடுவது
C) தேர்பந்தயம்
D) இவையனைத்தும்

45. தனுர்வேதம் எனப்படுவது
A) மருத்துவம் B) கட்டடக்கலை
C) சண்டைப் பயிற்சி D) பாடல்கள்

46. சமண மதத்திற்கு உறுதியான அமைப்பைத் தந்தவர்
A) மகாவீரர் B) ரிஷப தேவர்
C) பார்சவநாதர் D) நேமிநாதர்

47. சமணசமயம் மிகவும் வலியுறுத்திய கொள்கை
A) உருவ வழிபாடு B) கொல்லாமை
C) தீண்டாமை D) திருடாமை

48. தமிழ்நாட்டில் சமணச் சிற்பங்கள் காணப்படும் இடங்களுள் ஒன்று
A) கிர்னார் B) கழுகுமலை
C) ஹதிகும்பா D) ஆதிச்சநல்லூர்

49. புத்தர் அறிவுணர்வு பெற்ற இடம்
A) குந்தக் கிராமம் B) மான்பூங்கா
C) கயா D) குஷிநகர்

50. புத்தமதத்தை பின்பற்றிய அரசர்களுள் முக்கியமானவர்
A) சந்திரகுப்தர் B) அசோகர்
C) பிந்துசாரர் D) இவர்களுள் யாருமில்லை

51. மகாவீரர் எத்தனையாவது தீர்த்தங்கரர்?
A) 23 B) 22
C) 1 D) 24

52. புத்தர் பிறந்த இடம்
A) கயா B) சாரநாத்
C) குஷிநகர் D) கபிலவஸ்து அருகில் லும்பினி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25 .......... A | 26 .......... C | 27 .......... B | 28 .......... D | 29 .......... B | 30 .......... C | 31 .......... A | 32 .......... C | 33 .......... D | 34 .......... C |
| 35 .......... B | 36 .......... D | 37 .......... A | 38 .......... A | 39 .......... C | 40 .......... B | 41 .......... D | 42 .......... C | 43 .......... A | 44 .......... A |
| 45 .......... C | 46 .......... A | 47 .......... B | 48 .......... B | 49 .......... C | 50 .......... B | 51 .......... D | 52 .......... D | | |

53. மகாவீரர் பிறந்த இடம்
A) குந்த கிராமம் B) லும்பினி
C) பாவபுரி D) கயா

54. ஜீனர் என்றால்
A) வென்றவர் B) மகாவீரர்
C) அறிவு பெற்றவர் D) மதகுரு

55. புத்தர் தன் முதல் போதனையை தொடங்கிய இடம்
A) சாரநாத் B) மான்பூங்கா
C) கயா D) வைசாலி

56. யார் காலத்தில் புத்த சமயம் இரண்டாக பிரிந்தது?
A) அசோகர் B) ஹர்ஷர்
C) கனிஷ்கர் D) குப்தர்களது காலம்

57. ஆதிநாதர் எனப்படுபவர்
A) மகாவீரர் B) பார்சவநாதர்
C) புத்தர் D) ரிஷப தேவர்

58. சமணர் கோயில் அமைந்துள்ள இடம்
A) தில்வாரா கோயில் B) சித்தூர்
C) கஜுராஹோ D) இவ்வயனைத்தும்

59. சமணர்களின் புனித நூல்
A) வினய பிடகம் B) பூர்வங்கள்
C) சுத்தபிடகம் D) அபிதம்மபிடகம்

60. சமண மதமும், புத்தமதமும் எந்த நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது?
A) கி.மு.6 B) கி.மு.3
C) கி.மு.7 D) கி.மு.4

61. மூன்றாவது புத்த சமய மாநாடு நடைபெற்ற இடம்
A) பாடலிபுத்திரம் B) காஷ்மீர்
C) ராஜகிருகம் D) வைசாலி

62. தன் தந்தையை சிறையிலடைத்து ஆட்சியை கைப்பற்றியவர்
A) அசோகர் B) பிம்பிசாரர்
C) அஜாதசத்ரு D) பிந்துசாரர்

63. அலெக்சாண்டர் எந்த நாட்டைச் சார்ந்தவர்
A) துருக்கி B) மாசிடோனியா
C) பாரசீகம் D) மங்கோலியா

64. செலூகஸ் நிகோடரை தோற்கடித்தவர்
A) அசோகர் B) அஜாதசத்ரு
C) சந்திரகுப்த மௌரியர் D) பிந்துசாரர்

65. கலிங்கத்தின் மீது படையெடுத்தவர்
A) அசோகர் B) அலெக்சாண்டர்
C) பிம்பிசாரர் D) சந்திரகுப்த மௌரியர்

66. இந்தியாவில் முதன்முதலில் மக்கள் நல அரசை உருவாக்கியவர் யார்?
A) அக்பர் B) அசோகர்
C) ஹர்சர் D) எவருமில்லை

67. மெகஸ்தனிஸ் எழுதிய நூல்
A) அர்த்த சாஸ்திரம் B) முத்ராராட்சம்
C) இண்டிகா D) சாகுந்தலம்

68. சக சகாப்தம் காலக் கணக்கீட்டு முறை எப்போது தொடங்கியது?
A) கி.பி.1 B) கி.மு.1
C) கி.மு.78 D) கி.பி.78

69. யூச்சி இனத்தை சார்ந்தவர்கள் யார்?
A) குஷானர்கள் B) மௌரியர்கள்
C) குப்தர்கள் D) ஹர்ஷர்

70. நான்காவது புத்தசமய மாநாட்டை கூட்டியவர்
A) அசோகர் B) கனிஷ்கர்
C) ஹர்ஷர் D) அஜாதசத்ரு

71. இரண்டாம் அசோகர் எனப்படுபவர்
A) அசோகரது பேரன் B) ஹர்ஷர்
C) சந்திரகுப்தர் D) கனிஷ்கர்

72. யாருடைய காலத்தில் நாளந்தா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது?
A) சமுத்திர குப்தர் B) சந்திரகுப்தர்
C) குமாரகுப்தர் D) ஸ்கந்தகுப்தர்

73. சீனப்பயணி பாகியான் யாருடைய அரசவைக்கு வந்தார்?
A) விக்கிரமாதித்யன் B) சமுத்திரகுப்தர்
C) குமாரகுப்தர் D) கனிஷ்கர்

74. சீனப்பயணி யுவான்சுவாங் யாருடைய அரசவைக்கு வந்தார்
A) விக்கிரமாதித்யன் B) ஹர்ஷர்
C) கனிஷ்கர் D) ஸ்கந்தகுப்தர்

75. ஹர்ஷ சரிதம் நூலை எழுதியவர்
A) ஹர்ஷர் B) பாகியான்
C) யுவான்சுவாங் D) பாணர்

76. யாருடைய காலத்தில் நாளந்தா பல்கலைக் கழகம் அதன் புகழின் உச்ச நிலையை அடைந்தது?
A) ஹர்ஷர் B) குமாரகுப்தர்
C) விக்கிரமாதித்யன் D) ஸ்கந்தகுப்தர்

77. அஜந்தாவிலுள்ள புத்த குகை ஓவியங்களும் சிற்பங்களும் யார் காலத்தை சார்ந்தது?
A) ஹர்ஷர் B) குப்தர்
C) மௌரியர் D) இராட்டிரகூடர்கள்

78. அலகாபாத் கல்வெட்டைப் பொறித்தவர்
A) சந்திரகுப்தர் B) அசோகர்
C) சமுத்திரகுப்தர் D) அரிசேனர்

79. சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டவர் யார்?
A) கனிஷ்கர் B) சந்திரகுப்தர்
C) ஹர்ஷர் D) எவருமில்லை

80. டெல்லி மெகரௌளி இரும்புத்தூண் யார் காலத்தை சார்ந்தது?
A) குப்தர்களது காலம் B) மௌரியர் காலம்
C) கனிஷ்கர் காலம் D) முகலாயர்கள் காலம்

81. எந்த நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் இடைக்காலம் எனப்படுகிறது
A) 8-18 B) 1-8 C) 6-18 D) 8-14

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 53 ........ A | 54 ........ A | 55 ........ B | 56 ........ C | 57 ........ D | 58 ........ D | 59 ........ B | 60 ........ A | 61 ........ A | 62 ........ C |
| 63 ........ B | 64 ........ C | 65 ........ A | 66 ........ B | 67 ........ C | 68 ........ D | 69 ........ A | 70 ........ B | 71 ........ D | 72 ........ C |
| 73 ........ A | 74 ........ B | 75 ........ D | 76 ........ A | 77 ........ B | 78 ........ D | 79 ........ C | 80 ........ A | 81 ........ A | |